بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 26/09/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹுனைன் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹுனைன் போரின் போர்ச் செல்வங்களைப் பகிர்ந்தளித்தது பற்றி கடந்த குத்பாவில் கூறப்பட்டு வந்தது. இதுகுறித்த மேற்கொண்ட விவரமும் இவ்வாறு உள்ளது: முன்னரே எடுத்துக் கூறப்பட்டது போன்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர்ச் செல்வங்களைப் பகிர்ந்தளித்தார்கள். போர்வீரர்களுக்கு அவர்களுக்கான பங்குகளை வழங்கி விட்டார்கள்தான்; ஆயினும், போர்ச் செல்வங்களில் ஐந்தில் ஒரு பங்கை ஏறத்தாழ முழுவதுமாகவே பெருமானார் (ஸல்) அவர்கள் உள்ளங்களில் அன்பை உருவாக்குவதற்காக குறைஷிய தலைவர்களுக்கும், ஏனைய அரேபிய தலைவர்களுக்கும் இடையே ஒருவருக்கு 100 ஒட்டகம், ஒருவருக்கு 50 ஒட்டகம் எனப் பகிர்ந்தளித்து விட்டார்கள். இவ்வளவு மிகுதியாக பிறருக்குப் பொருள் வழங்கப்பட்டதனால், அன்ஸாரி இளைஞர்கள் சிலர் இதை (நெருடலாக) உணர்ந்தார்கள். அவர்களுடைய தொண்டுகள் மற்றும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள்மீது அவர்கள் கொண்டிருந்த அன்பின் காரணமாக அவர்கள் தங்களைப் பிறரைக் காட்டிலும் அதிகம் உரிமை உடையவர்கள் எனக் கருதினார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* சிலவேளை கவனமின்மையில் கூறப்படும் விஷயம் மிகவும் தொலைநோக்கு விளைவுகளைக் கொண்டிருக்கிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் பகிர்ந்தளித்ததில் அன்ஸாரி இளைஞர்கள் விருப்பமின்மையை வெளிப்படுத்தினார்கள்தான்; ஆனால், அனைவரும் செய்திருக்கவில்லை. ஆனால், இறைவனுக்கும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கும் இது எந்த அளவுக்கு சினமூட்டக்கூடியதாக இருந்தது என்றால், அன்ஸாரிகள் உலகம் இருக்கும் நாள் வரை இதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டியதாயிற்று. ஆக, இதைப் பற்றிக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கண்டபோது, மக்கத்தினர் ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். ஈமானால் முழுமையாக ஒளிபெறாததன் காரணத்தினால் அவர்களுடைய பார்வைகள் இன்னும்

உலகத்தின் பக்கமே இருந்தன. இதற்குப் பிறகு நடந்த ஒரு போரில் சிறிது செல்வங்கள் முஸ்லிம்களின் கைக்கு எட்டின. பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த செல்வங்களை அந்த மக்களிடைய பகிர்ந்தளித்து விட்டார்கள். அன்ஸாரி இளைஞர் ஒருவர் ஓர் அவையில், 'எங்களுடைய வாள்களில் இருந்து இரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செல்வங்களைத் தம் உறவினர்களுக்கு வழங்கியுள்ளார்கள்' என்று கூறினார்.

மாநபி (ஸல்) அவர்களுக்கு இது பற்றி தெரியவந்தபோது, பெரிய அன்ஸாரிகளை வரவழைத்து, "இப்படி ஒரு செய்தி என் காதுக்கு எட்டியுள்ளதே!" என்று வினவினார்கள். அன்ஸாரிகள் அழுது விட்டார்கள். 'யாரோ அறியாதவர் சொல்லி விட்டார்' என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், "இல்லை, அன்ஸாரிகளே! 'நாங்கள் முஹம்மதுக்கு {(ஸல்)}, அவருக்கு யாரும் இடம் அளிக்காதபோது, அவருடைய ஊர் மக்கள் அவரை வெளியேற்றி விட்டபோது இடமளித்தோம். பிறகு, அவருக்கு கண்ணியமும் வெற்றியும் கிடைத்ததும் அவர் செல்வங்களைத் தம் உறவினர்களுக்கு இடைய பகிர்ந்தளித்து விட்டார் என்று நீங்கள் சொல்லாம்" என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் அன்ஸாரிகள் அலறி விட்டார்கள். பிறகு அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} நாங்கள் அப்படி செய்வதில்லை' என்று கூறினார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் இதையே இன்னொரு விதமாகவும் சொல்லலாம். அது எப்படி என்றால், எந்த நபரை இறைவன் முழு உலகின் நேர்வழிக்காக அனுப்பினானோ, அவர் மக்காவின் உடைமையாக இருந்தார். ஆனால், இறைவன் அவரை மதீனாவுக்குக் கொண்டு சென்றான். பிறகு, இறைவன் தனது ஆற்றல் மற்றும் வலுவால் மக்காவை அவருக்காக வெற்றி காணச் செய்தான். அப்பொழுது மக்கத்தினர் அவர்களுடைய உடைமை அவர்களுக்கு(த் திரும்ப)க் கிடைத்து விடும் என நினைத்தார்கள். ஆனால், மக்கத்தினர் ஆடு மாடுகளை எடுத்துச் சென்றார்கள். மதீனத்து மக்கள் இறைவனின் தூதர் (ஸல்) அவர்களை எடுத்துக் கொண்டு தமது ஊரை நோக்கிச் சென்று விட்டார்கள்." பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த விஷயம் ஓர் அறிவீனரின் நாவிலிருந்துதான் வந்துள்ளது; ஆனால், இதன் காரணமாக, இப்பொழுது உங்களுக்கு இந்த உலகின் ஆட்சி கிடைக்க முடியாது. இப்பொழுது உங்களுடைய தொண்டுகளுக்கான கைமாறு உங்களுக்கு கவ்ஸர் நீரூற்றிலேயே கிடைக்கும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பார்த்துக் கொள்ளுங்கள்! வரலாறு என்ன கூறுகிறது என்றால், 13 நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. 14 ஆம் நூற்றாண்டு நடந்து கொண்டிருக்கிறது (இப்பொழுது அதுவும் கழிந்து விட்டது என்றே சொல்ல வேண்டும்). இந்தக் காலகட்டத்தில் ஒவ்வொரு சமுதாயமுமே இஸ்லாத்தினால் மன்னராகியது. ஆனால், எந்த அன்ஸாரியும் மன்னராக முடியவில்லை. எனவே, சிலவேளை ஒரு நபரின் கூற்று முழு சமுதாயத்திற்கும் இழப்பிற்குக் காரணமாக அமையலாம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் இந்த நிகழ்வைத் தமது ஒரு குத்பாவில் எடுத்துரைத்துள்ளார்கள். இதை எடுத்துரைத்து ஜமாஅத்துக்கு அறிவுரை கூறியுள்ளார்கள். அப்பொழுது இருந்தது போன்றே, அது இன்றும் நமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஹுஸூர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: தமக்கு ஏதேனும் பொறுப்பு கிடைக்க வேண்டும் அல்லது செல்வம் போன்றவை கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தியாகம் செய்பவர்கள் ஒருபோதும் நான் அழைக்கும்போது (அதாவது, காலத்தின் கலீஃபா அழைக்கும் போது) தியாகம் செய்ய வராதீர்கள். மாறாக, இறைவனுக்காகத் தியாகம் செய்பவர்கள் மட்டுமே வாருங்கள். ஏனென்றால், நானே வலுவற்ற, நோய்வாய்ப்பட்ட மனிதன் ஆவேன். என்னால் யாருடைய பேருதவிக்கும் கைமாறு செய்ய முடியாது. எனவே, நான் எனக்காகக் கேட்பதில்லை. இறைவனுக்காகத் தருபவர் தரட்டும். இறைவன் அதற்கான நற்கூலியையும் வழங்குவான். இறைவன் மீது தவக்குல் வைக்க வேண்டும். அவன் நாடினால் இந்த உலகில் வழங்கிடலாம்; அவன் நாடினால் மறுமையில் வழங்கிடாலம். எவ்வாறாயினும், கலப்பற்ற முறையில் தியாகம் செய்பவரின் தியாகம் வீண்போவதில்லை. நம்பிக்கையாளரின் தியாகத்தை எவராலும் வீணடிக்க முடியாது. எனவே, உலகத்தை அல்லாமல் இறைவனை முன்னிறுத்துபவர்கள்தான் தியாகம் செய்யக்கூடியவர்கள் ஆவார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* ஒரு வயதை அடைந்து ஜமாஅத் மக்களிடமும், 'நமக்கு இவ்வளவு அனுபவம் உள்ளது. நாம் இவ்வளவு வேலை பார்த்துள்ளோம். நமக்கு இதற்கான வெகுமதி கிடைக்க வேண்டும். அது வழங்கப்படுவதில்லை' என்ற சிந்தனை உருவாகி விடுகிறது. உலகின் வெகுமதியை மட்டுமே பெற வேண்டுமா அல்லது அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாக வேண்டுமா என அவர்கள் சிந்திக்கட்டும். இன்றிலிருந்து அன்ஸாருல்லாஹ்வின் இஜ்திமாவும் நடைபெறுகிறது. அனுபவம் கிடைத்து விடும்போது இந்த வயதில் சிந்தனை வருகிறது. எனவே, இதையொட்டி நான் அன்ஸாருக்கும் இதைக் கூறுகிறேன்: தன்னுடைய அனுபவங்கள் மற்றும் தொண்டுகள் குறித்து யாருடைய உள்ளத்திலாவது ஏதேனும் சிந்தனை உதித்தால், அவர் அதை உதறித் தள்ளட்டும். மேலும், இறைவனின் திருப்தியை நாடுவதற்கு முயற்சி செய்யட்டும்.

இந்தத் தருணத்தில் காட்டரபிகள் பொறுமையிழந்தது பற்றியும் கூறப்பட்டுள்ளது. போர்ச் செல்வத்தைப் பகிர்ந்தளிக்கும் நேரத்தில் சில காட்டரபி மக்களும் மாநபி (ஸல்) அவர்களைச் சுற்றி ஒன்று திரண்டு விட்டார்கள். பொருள் வழங்குமாறு கேட்கத் துவங்கி விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் காட்டரபிகளின் இந்த பண்பற்ற செயலுக்காக அவர்களை எவ்வகையிலும் கண்டிக்கவோ, அவர்கள் மீது சினம் கொள்ளவோ இல்லை. அதற்கு மாறாக, புன்சிரித்தவாறு மிகச் சிறந்த முறையில் அவர்களுக்குத் தர்பிய்யத் வழங்கினார்கள். அவர்களுக்குப் பொருட்களையும் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்தப் போர்கள் முடிந்தபிறகு, தோல்வியடைந்த எதிரிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட அபராதங்கள் மற்றும் போர்க்களத்தில் விடப்பட்ட பொருட்கள் மூலமாக ஒன்று சேர்ந்த செல்வங்கள் ஆகியவை இருந்தன. வழக்கப்படி, அவற்றை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய படையில் பங்கிட்டு வழங்க வேண்டும். ஆனால், இந்தத் தருணத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் இந்தப் பொருட்களை முஸ்லிம்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு பதிலாக மக்கத்தினருக்கும், சுற்றுவட்டாரத்தில் இருந்த மக்களுக்கும் பகிர்ந்தளித்து விட்டார்கள். இந்த மக்களுக்குள் இன்னும் ஈமானோ உருவாகியிருக்கவில்லை. பலரோ இன்னும் நிராகரிப்பாளர்களாகவே இருந்தார்கள். முஸ்லிம்களாக இருந்தவர்களும் புதிதாக முஸ்லிம்கள் ஆகியிருந்தார்கள். ஒரு சமுதாயம் தனது செல்வத்தை மற்ற மக்களுக்குப் பகிர்ந்தளிப்பது அவர்களுக்கு முற்றிலும் புதிய விஷயமாக இருந்தது.

சில மக்களிடம் இந்தப் பொருள் விநியோகத்தால் உள்ளத்தில் நன்மையும், இறையச்சமும் உருவாவதற்கு பதிலாக பேராசை இன்னும் அதிகரித்து விட்டது. அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களைச் சுற்றி கூட்டம் கூடி விட்டார்கள். மேற்கொண்டு வழங்கக் கோரி மாநபி (ஸல்) அவர்களுக்குத் தொல்லை கொடுக்கத் துவங்கி விட்டார்கள். எதுவரை என்றால், தள்ளித் தள்ளி பெருமானார் (ஸல்) அவர்களை ஒரு மரம் வரை கொண்டு சென்று விட்டார்கள். ஒரு மனிதரோ மாநபி (ஸல்) அவர்களின் தோள்களில் போர்த்தப்பட்டிருந்த அன்னாரது போர்வையைப் பிடித்து எப்படி முறுக்கினார் என்றால், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மூச்சுத் திணறி விட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களே! என்னிடம் வேறு ஏதாவது இருந்திருந்தால் நான் அதையும் உங்களுக்கு அளித்திருப்பேன். நீங்கள் என்னை ஒருபோதும் கருமியாகவோ அல்லது கோழையாகவோ காண மாட்டீர்கள்.

பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் தமது ஒட்டகத்துக்கு அருகில் சென்று, அதன் ஒரு முடியைப் பிடுங்கி, அதைத் தூக்கிக் காட்டி இவ்வாறு கூறினார்கள்: மக்களே! அரேபியாவின் சட்டப்படி, அரசாங்கத்தின் பங்கான அந்த ஐந்தில் ஒரு பங்கைத் தவிர, எனக்கு உங்களின் செல்வங்களில் இருந்து இந்த முடிக்கு சமமாகக் கூட எதுவும் தேவையில்லை. அந்த ஐந்தாவது பங்கைக் கூட நான் எனக்காக செலவு செய்வதில்லை. மாறாக, அதுவும் உங்களுடைய வேலைக்களுக்காகவே செலவிடப்படுகிறது. மேலும், நினைவில் கொள்ளுங்கள்! நம்பிக்கை துரோகம் செய்யும் மனிதன் கியாமத் நாளன்று இறைவன் முன்னிலையில் இந்த நம்பிக்கை துரோகத்தின் காரணமாக இழிவடைவான்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அரசாட்சிக்கு ஆசைப்பட்டார்கள் என்று மக்கள் கூறுகிறார்கள். அரசர்களுக்கும் பொது மக்களுக்கும் இப்படியான தொடர்பா இருக்கும்? அரசரை இப்படித் தள்ளித் தள்ளிக் கொண்டு செல்வதற்கும், அவரது கழுத்தில் துணியைப் போட்டு இழுப்பதற்கும் யாருக்கும் ஆற்றல் இருக்கிறதா? அல்லாஹ்வின் தூதர்களைத் தவிர வேறு எவரால் இந்த முன்மாதிரியைக் காட்ட

முடியும்? ஆனால், இவ்வாறு எல்லாப் பொருட்களையும் ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்த பிறகும், இத்தகைய கல்நெஞ்சம் கொண்ட மக்கள் இருந்தார்கள். அவர்கள் மாநபி (ஸல்) அவர்களின் பகிர்ந்தளிப்பை நீதியான பங்கீடாகக் கருதவில்லை.

ஹதீஸில் இவ்வாறு அறிவிப்புகள் கிடைக்கின்றன: போர்ச் செல்வத்தைப் பகிர்ந்தளிக்கும்போது, ஒரு காட்டரபி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, 'முஹம்மதே {(ஸல்)}! தாங்கள் என்னிடம் வாக்குறுதி அளித்தீர்கள் அதை நிறைவேற்றுங்கள்' என்று கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள், "மகிழ்ச்சி அடைவாயாக" என்று கூறினார்கள். அந்தக் காட்டரபி, 'தாங்கள் பல முறை மகிழ்ச்சி அடைவாயாக என்றே கூறி வந்துள்ளீர்கள்' என்று கூறினார். அதாவது, தாங்கள் எதுவும் வழங்கவில்லை. கூற மட்டும்தான் செய்கிறீர்கள் என்பது போன்று கூறினார்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இவருடைய இந்த எதிர்வினை முற்றிலும் விரும்பத்தகாததாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் அவர் பக்கத்திலிருந்து தமது அருளுக்குரிய முகத்தைத் திருப்பி விட்டார்கள். அங்கு ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களும், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கித் தமது இன்முகத்தைத் திருப்பியவாறு, "இவரோ நற்செய்தியை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். இப்பொழுது நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். இருவரும் இதைக் கேட்டதும் உடனடியாக, 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} நாங்கள் ஏற்றுக் கொண்டோம்' என்று கூறினார்கள். இதற்குப் பிறகு, நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தண்ணீர்க் குவளையை வரவழைத்தார்கள். அதில் தம்முடைய கைகளையும் முகத்தையும் கழுவினார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மீதமிருந்த தண்ணீரை ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அவர்களுக்கும் வழங்கியவாறு, "நீங்கள் இருவரும் இந்தத் தண்ணீரைப் பருகிடுங்கள். உங்களுடைய முகத்திலும் நெஞ்சிலும்கூடத் தெளித்துக் கொள்ளுங்கள். மேலும், மகிழ்ச்சி அடைந்து விடுங்கள்" என்று கூறினார்கள். ஆக, அவர்கள் குவளையைப் பெற்று அவ்வாறே செய்தார்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* இங்கு தூய துணைவியார்களின் கலப்பற்ற தன்மை மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய இருப்பிலிருந்து அருளைப் பெறுவதற்கான தாகம் ஆகியவற்றின் ஒரு விந்தையான மற்றும் பொறாமை கொள்ளத்தக்க காட்சியும் தென்படுகிறது. இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அருகிலேயே ஒரு கூடாரத்தில் உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் உம்மு சலமா (ரலி) அவர்களும் இருந்தார்கள். அவர்கள் திரைக்குப் பின்னாலிருந்து அவர்களிடம், 'உங்கள் தாய்க்காகவும் தண்ணீரை மிச்சப்படுத்துங்கள்' என்று கூறினார்கள். எனவே, அவர்கள் ஹஸ்ரத் உம்மு சலமா (ரலி) அவர்களுக்காகவும் சிறிது தண்ணீரைக் குவளையில் விட்டு விட்டார்கள்.

*இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள்.*

முதலாவது, உருமேனியாவின் இயக்கத்தின்முரப்பி **மதிப்பிற்குரிய ஃபஹீமுத்தீன் நாஸிர் சாஹிப்** அவர்கள் ஆவார்கள். இவர்களின் தந்தை வழிக் கொள்ளுப் பாட்டனாரான ஹஸ்ரத் மிர்ஸா அலம் தீன் சாஹிப் அவர்கள் மூலமாக இவர்களுடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. மர்ஹூம் ஜூன் 1996 இல் ஜாமிஆவில் தேர்ச்சி பெற்றார்கள். பிறகு, இவர்கள் தஃப்ஸீருல் குர்ஆனில் சிறப்புப் படிப்பும் படித்தார்கள். 2006 இல் இவர்கள் உருமேனியாவுக்கு அனுப்பட்டார்கள். வஃபாத் வரை இவர்கள் அங்கேயே தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்று வந்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* இவர்கள் அந்நிய நாட்டில் மார்க்கத்துக்காக அர்ப்பணமானார்கள். இந்த வகையில் இவர்களுடைய படித்தரம் ஷஹீதுக்கான படித்தரம்தான். இறுதி மூச்சு வரை தமது நன்றியுணர்விற்கான உறுதிமொழியை நிறைவேற்றினார்கள்; மிகவும் நன்றாக நிறைவேற்றினார்கள். நிச்சயமாக மர்ஹூம் ஃபஹீம் நாஸிர் அவர்களின் குணாதிசயமும், முன்மாதிரியும் குறிப்பாக, வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு ஒரு பாடமாகும்.

இரண்டாவது, கனடாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்துர் ரஷீத் ஃபாரூக்கீ சாஹிப் அவர்களின் மகன் **மதிப்பிற்குரிய அப்துல் அலீம் ஃபாரூக்கீ சாஹிப்** அவர்கள் ஆவார்கள். இவர்களை இவர்களின் வீட்டில் வைத்தே ஆயுதம் ஏந்திய கொள்ளையர்கள் துப்பாக்கியால் சுட்டு ஷஹீது ஆக்கினார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். இவர்கள் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் சஹாபிகளான ஹஸ்ரத் மவ்லவி குத்ரத்துல்லாஹ் சாஹிப் சனோரீ (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மவ்லவி முஹம்மத் ஹுஸைன் சாஹிப் (ரலி) அவர்கள் ஆகியோரின் கொள்ளுப் பேரராவார்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மர்ஹூம்களின் பாவமன்னிப்பு மற்றும் படித்தரத்தின் உயர்வு ஆகியவற்றிற்காக துஆ செய்தார்கள். மேலும், இவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழ வைக்கப்படும் என அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ

اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ،

عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ

تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**